**செய்தி வெளியீடு எண்.981** **நாள். 17 .12.2009**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**செய்தி வெளியீடு**

''**திருச்சி அரசு மருத்துவமனையில் ஒரே வருடத்தில் 750 குழந்தைகள் ஜனனம் . . . அங்கேயே மரணம்**'' என்ற தலைப்பில் **13.12.2009** தேதியிட்ட ஜுனியர் விகடன் வார இதழிலும், **23.12.2009** தேதியிட்ட குமுதம் வார இதழில் ''இந்த வாரக் கேள்வி''யாக ஜுனியர் விகடன் வெளியிட்ட செய்தியை மேற்கோள்காட்டி திருச்சி அரசு மருத்துவமனையில் ஒவ்வொரு வருடமும் பிறக்கும் குழந்தைகளில் **25** சதவிகிதம் உடனே இறக்கின்றன, ஆனால் அரசு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி கி.ஆ.பே. விஸ்வநாதம் மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை பரிந்துரைக்கப்படும் மருத்துவமனையாகவும் (Referral Hospital) செயல்படுகிறது. இந்த மருத்துவமனைக்கு திருச்சி நகரம் மட்டுமல்லாது, இம்மாவட்டத்தைச் சுற்றியுள்ள பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள், திருச்சி மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் இம்மாவட்டத்தின் புறநகர் பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்தும் நோய் முற்றிய நிலையில், இறக்கும் தருவாயில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் குழந்தைகளும், மகப்பேறுக்குப் பின்னர் உடல் நலம்குன்றிய தாய்மார்களும் இம்மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகிறார்கள். அப்படி வரும் நோயாளிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி சில குழந்தைகள் இறந்துவிடுகின்றன.

திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனையின் பிரசவ வார்டுக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் விநியோகம் செய்யாததால்தான், குழந்தைகள் இறப்பிற்கு காரணம் என ஜுனியர் விகடன் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த தகவல் தவறான, முற்றிலும் உண்மைக்கு மாறான செய்தியாகும். **2008**–ஆம் ஆண்டில் **211** பிராணவாயு உருளைகள் பிரசவ வார்டுக்கும், **212** உருளைகள் குழந்தைகள் வார்டிலும், **413** ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் தீவிர சிசு பராமரிப்பு வார்டுக்கும் ஆக **836** பிராணவாயு உருளைகளும், **2009**–ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை **153** உருளைகள் பிரசவ வார்டுக்கும், **246** உருளைகள் குழந்தைகள் வார்டிலும், **355** சிலிண்டர்கள் தீவிர சிசு பராமரிப்பு வார்டுக்கும், ஆக மொத்தம் **754** சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரசவ வார்டு மற்றும் சிசு பராமரிப்பு வார்டுகளுக்கு பிராணவாயு உருளைகள் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மத்திய

பிராணவாயு கிடங்கும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 24 மணி நேரமும் எல்லா முக்கியமான வார்டுகளுக்கும் குறிப்பாக பிரசவ வார்டு மற்றும் சிசு பராமரிப்பு வார்டுகளுக்கும் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆக்ஸிஜன் கொடுக்காததால் தான் குழந்தைகள் இறந்ததாக கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறான செய்தியாகும்.

2008–ஆம் ஆண்டில் இம் மருத்துவமனையில் 7451 பிரசவங்களும், 2009–ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை 6663 பிரசவங்களும் நடைபெற்றுள்ளன. இதில் 2008–ஆம் ஆண்டில் 379 குழந்தைகளும், 2009–ஆம் ஆண்டில் 339 குழந்தைகளும் இறந்துள்ளன. இறப்பு விகிதம் ஐந்து விழுக்காடு ஆகும்.

திருச்சி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ஒரு மாதத்திற்கு சுமார் 225 முதல் 250 பச்சிளம் குழந்கைகள் உள்நோயாளியாக அனுமதிக்கப்படுகின்றனர். சராசரியாக ஒரு மாதத்தில் 25 குழந்தைகள் சிகிச்சை பலனின்றி இறக்கின்றன. இறப்பு விகிதம் பத்து சதவீதமாகும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருச்சி மாவட்டமல்லாது சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் வீடுகளில் நிகழும் பிரசவங்களில் ஆபத்தான நிலையில் திருச்சி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு, திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். இந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | விவரம் | 2008 | 2009 (11/2009 வரை) |
|---|---|---|---|
| 1 | அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை | 2631 | 2811 |
| 2 | இவர்களில் இறந்த பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை | 298 | 293 |

திருச்சி அண்ணல் காந்தி மருத்துவமனையில் நிகழ்ந்த பச்சிளம் குழந்தைகளின் இறப்பு, மாதம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **மாதம்** | **அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் விபரம்** | | **இறந்த பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கைகள்** | |
|---|---|---|---|---|
| | ***2008*** | **2009** | ***2008*** | **2009** |
| ஜனவரி | *195* | 230 | *19* | 25 |
| பிப்ரவரி | *170* | 237 | *19* | 35 |
| மார்ச் | *168* | 258 | *30* | 30 |
| ஏப்ரல் | *258* | 305 | *27* | 20 |
| மே | *190* | 180 | *16* | 25 |
| ஜுன் | *257* | 304 | *17* | 25 |
| ஜுலை | *207* | 212 | *15* | 23 |
| ஆகஸ்ட் | *180* | 264 | *40* | 24 |
| செப்டம்பர் | *248* | 272 | *31* | 33 |
| அக்டோபர் | *250* | 268 | *32* | 22 |
| நவம்பர் | *267* | 281 | *28* | 31 |
| டிசம்பர் | *241* | --- | *24* | --- |
| **மொத்தம்** | ***2631*** | **2811** | ***298*** | **293** |

இந்த இறப்பு விகிதம் 10.4 ஆகும். இறந்த குழந்தைகள் அனைத்தும் ஆக்ஸிஜன் இல்லாததால் தான் இறந்தது என்பது தவறான தகவலாகும்.

குழந்தைகள் நலப்பிரிவிற்கு தற்போது இணை பேராசிரியர் நிலையில் ஒரு தலைமை மருத்துவர் மற்றும் நான்கு உதவி பேராசிரியர்கள் மூலம் குழந்தைகள் நலப் பிரிவு பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. தீவிர சிசு பாராமரிப்பு பிரசவத்திற்கென கூடுதாக நான்கு மருத்துவர்கள் மற்றும் ஒன்பது செவிலியர்களை நியமனம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. ஒன்பது செவிலியர்கள் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டு, இவர்கள் தற்போது சென்னை குழந்தைகள் நல மருத்துவமனையில் 45 நாட்கள் சிறப்பு பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி முடிந்து அடுத்த வாரத்தில் திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிசு பராமரிப்பு பிரிவில் பணிபுரிய உள்ளனர். தீவிர சிசு பராமரிப்பு பிரிவிற்கென தனியாக ஒரு கட்டடம் ரூ.25 இலட்சம் செலவில் கட்ட ஏற்கனவே தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தில் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி தொடங்க உள்ளது. குழந்தைகள் நலப்பிரிவிலும் தீவிர சிசு பராமரிப்பு

பிரிவிலும் அதற்கென பிரத்தியோகமாக சிறப்பு பயிற்சி பெற்ற செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணி நேரமும் பணிபுரிந்து வருகிறார்கள்.

திருச்சி அரசு மருத்துவமனையில் நிகழும் இறப்புகள் மட்டும் மாநகராட்சியில் பதிவு செய்யப்படுவதில்லை. இந்த மருத்துவமனையில் நிகழும் இறப்புகள் மட்டும் அல்லாது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து, தனியார் மருத்துவமனை மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் ஏற்படும் இறப்புகளும், வீடுகளில் நிகழும் இறப்புகளும் பதிவு செய்யப்படுகின்றன. எனவே மாநகராட்சியில் பதிவான இறப்புகள் அனைத்தும் திருச்சி அரசு மருத்துவமனையில் நிகழ்ந்ததாக கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது சரியான நிகழ்வு அல்ல.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மிகச் சிறப்பாக உள்ளதால் தான், மருத்துவக் கல்லூரி உள்ள மாவட்டம் மட்டுமின்றி அதனைச் சுற்றி உள்ள மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மட்டும் அல்லாது தனியார் மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் நிகழும் பிரசவங்களிலும் ஆபத்தான நிலையில் பச்சிளம் குழந்தைகளை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கின்றனர். இந்த மருத்துவமனைகளில் உடனடியாக உரிய மேல் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், பச்சிளம் குழந்தையின் குறைவான எடை போன்ற பல்வேறு காரணங்களினால் இறப்புகள் ஏற்படுகின்றன. இது போன்ற பச்சிளம் குழந்தை இறப்புகள் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சுமாராக ஆறுநூறும், சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் சுமார் ஆயிரமும், சென்னை கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் சுமார் இருநூறும், சென்னை எழும்பூர் மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் சுமார் ஆறுநூறும் ஏற்படுகின்றன. திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சுமார் முன்னூறு பச்சிளம் குழந்தை இறப்புகள் கடந்த ஆண்டும் நடப்பு ஆண்டும் நிகழ்ந்துள்ளன.

தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் தாய்சேய் பிரிவுகளின் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழும் பிரசவங்கள் 50 சதவிகிதத்திலிருந்து 65 விழுக்காட்டிற்கு மேலாக உயர்ந்துள்ளது. தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களின் சதவிகிதம் 50–திலிருந்து 34 சதவிகிதமாக

குறைந்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கை 2005–06–ஆம் ஆண்டில் 81,190–ஆக இருந்தது. 2008–09–ஆம் ஆண்டில் மூன்று மடங்கு அதிகரித்து 2,59,133 பிரசவங்கள் நடந்துள்ளது. இது மேலும் உயர்ந்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டில்தான் 99.5 விழுக்காடு பிரசவங்கள் மருத்துவமனைகளில் நிகழ்கின்றன (Institutional Deliveries). 0.5 சதவிகிதம் பிரசவங்கள் மட்டும் தற்போது வீடுகளில் நடக்கின்றன. இதனையும் முழுவதுமாக மருத்துவமனைகளில் நிகழும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் 1000 குழந்தைகளுக்கு 44–ஆக இருந்தது. இதைக் குறைக்க கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால் 2008–ஆம் ஆண்டு இந்த விகிதம் 31–ஆக குறைந்துள்ளது. இதே போல் மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் ஒரு இலட்சத்திற்க்கு 110–ஆக இருந்து தற்போது 79–ஆக குறைந்துள்ளது. சுகாதாரதத் துறையில் தமிழக அரசு எடுத்துவரும் பல்வேறு திட்டங்களை இந்திய அரசும் மற்ற மாநில அரசுகளும் பாராட்டுகின்றன. நம்முடைய திட்டங்களை மற்ற மாநிலங்களில் அமுல்படுத்த அவர்கள் இங்கு வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 16.60 இலட்சம் சிசு மரணங்கள் நிகழ்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 35,000 சிசு மரணங்கள் நிகழ்கிறது. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையின் உயிரும் விலை மதிப்பற்றது என்பதை உணர்ந்து, குழந்தைகள் இறப்பையும் மகப்பேறு தாய்மார்கள் இறப்பையும் மேலும் குறைக்க இந்த அரசு முனைப்புடன் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

வி.கு. சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**